# நடப்பு நிகழ்வுகள்- மார்ச் 20 - 2018

- **ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பந்திபோரா மாவட்டத்தில் அமைந்துள்ள கிஷன்கங்கா நீர் மின் திட்டத்தின் (Kishanganga Hydro Project) முதல் அலகு 19-03-2018 அன்று செயல்பாட்டிற்கு வந்துள்ளது.** பொதுத்துறை நிறுவனமான பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் லிமிடெட் மூலம் அமைக்கப்படும் மொத்தம் 340 மெகாவாட் திறனுடைய இந்த திட்டத்தின், 110 மெகாவாட் உற்பத்தி திறனுடைய முதல் அலகு தற்போது செயல்படத்துவங்கியுள்ளது.

- முதலாவது இந்திய ஜப்பான் பேரிடர் ஆபத்து குறைப்பு பட்டறை 2018 (India-Japan Workshop on Disaster Risk Reduction), மார்ச் 19-ம் தேதி டெல்லியில் தொடங்கியது. பேரிடர் தொடர்பாக இருதரப்பு செயல் திட்டத்தை உருவாக்குவது இந்த இரு நாள் பயிற்சி பட்டறையின் நோக்கமாகும்.

- இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் புதுமை மற்றும் தொழில் முனைவோர் விழாவை (FINE-Festival of Innovation and Entrepreneurship) புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் தொடங்கிவைத்தார். இந்த நிகழ்வில் SRISTI அமைப்பு வழங்கும் இளம் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு விருதுகள் வழங்கப்படுகிறது.

- மார்ச் 17 அன்று இஸ்ரேலின் ரிசோன் லெசியோனில் நடைபெற்ற நிகழாண்டின் இஸ்ரோல் ஜூனியர் பாட்மிட்டன் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த பூர்வா பவே ரஷ்யாவின் அனஸ்தசியா புஸ்தின்ஸ்கையாவை தோற்கடித்து மகளிர் ஒற்றையர் பட்டத்தை கைப்பற்றினார்.

- **ஏழாவது "பெண்கள் அறிவியல் காங்கிரஸ்" (Women's Science Congress) மணிப்பூர் மாநிலத்திலுள்ள இம்பால் பல்கலைக்கழகத்தில்** 18-19 மார்ச் 2018 ஆகிய தினங்களில், 105 வது இந்திய அறிவியல் காங்கிரஸ் கூடுகையின் ஒரு பகுதியாக நடைபெற்றது. முதல் பெண்கள் அறிவியல் மாநாடு 2012 ஆம் ஆண்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது,

OXFORD IAS ACADEMY

- **இந்தியாவிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்யும் நாடுகளின் பட்டியலில் (2013-2017) ரஷியா முதலிடத்தைலும், அமெரிக்கா இரண்டாமிடத்திலும், இஸ்ரேல் மூன்றாமிடத்திலும், பிரான்ஸ் நான்காம் இடத்திலும்** இருப்பதாக ஸ்டாக்கோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில், உலகிலேயே மிகப்பெரிய ஆயுத இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா இருந்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- நிகழாண்டின் சர்வதேச யோகா விழாவை மார்ச் 21 அன்று புது டெல்லியில் உள்ள தேசிய யோகா நிறுவனத்தில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் நடத்தவுள்ளது. இது ஜுன் 21 அன்று கொண்டாடப்படவுள்ள சர்வதேச யோகா நாளுக்கான தொடக்கவிழா நிகழ்வாகும்.

- இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனம், டோர் டெலிவரி மூலம் டீசலை வீட்டிற்கே கொண்டு வரும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முதற்கட்டமாக மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சேவை விரைவில் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஜார்கண்ட், மத்தியபிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களின் பங்கேற்புடனான நிதி ஆயோக்கின் கல்வித்துறையில் மனித மூலதனத்தை மாற்றியமைப்பதற்கான நிலையான செயல்திட்டம் 2018-2020 மார்ச் 17 அன்று வெளியிடப்பட்டது. நிதிஆயோக்கின் முதன்மை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த் இந்த செயல் திட்டத்தை வெளியிட்டார்.

OXFORD
IAS ACADEMY

- ”வருனா 2018” (VARUNA-18) என்ற பெயரில் இந்திய-பிரஞ்சு கடற்படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சி அரபிக்கடல், வங்காள விரிகுடா மற்றும் தென்மேற்கு இந்திய பெருங்கடல் பகுதிகளில் நடத்தப்பட உள்ளது. இந்திய கடற்படையும், பிரெஞ்ச் கடற்படையும் 1993 மே மாதம் முதல் இருதரப்பு கடல்சார் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. 2001 முதல், இதுபோன்ற ஒத்திகைக்கு வருணா எனப் பெயரிடப்பட்டு இதுவரை 15 ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. கடைசியாக, 2017 ஏப்ரல் மாதம் பிரெஞ்ச் கடற்பகுதியில் வருணா ஒத்திகை நடைபெற்றது.